நொந்துடலும் கிழமாகித் தளர்ந்தபின் நோயில் நடுங்கிடும் போது ஜீவ நாடிகள் நைந்திடும்போது மனம் எண்ணிடுமோ தெரியாது
இன்று சிந்தை கசிந்துன்னை கூவுகின்றேன் அருள் செய்திடுவாய் ஹரி நாராயணா
நீடு கபம் கோழை ஈழை நெருக்கி என் நெஞ்சை அடைத்திடும்பொது விக்கி நாவும் குழறியபோது மனம் எண்ணிடுமோ தெரியாது
நான் அன்றுன்னைக்கூவிட இன்றழைத்தேன் என்னை ஆண்டருள்வாய் ஹரி நாராயணா
ஐம்பொறியும் கரணங்களும்வாயுவும் ஆடி அடங்கியபோது எந்தன் ஆவி பிரிந்திடும் போது மனம் எண்ணிடுமோ தெரியாது
இன்று நம்பி உன்னை தொழுதே அழைத்தேன் ஜகன் நாயகனே ஹரி நாராயணா
உற்றவர் பெற்றவர் மற்றவர் சுற்றமும் ஓவென்று நின்றழும்போதுஉயிர் ஓசைகள் ஓய்திடும்போது மனம் எண்ணிடுமோ தெரியாது
இன்று பற்றி உன்னைப்பணிந்தே அழைத்தேன் ஆபத் பாந்தவனே ஹரி நாராயணா
எம்பொருள் என்மனை என்றெதெல்லாம் இனி இல்லை என்றாகிடும்போது மனம் எண்ணிடுமோ தெரியாது
நீ அன்று வரும் பொருட்டின்றழைத்தேன் அருள் அச்சுதனேஹரி நாராயணா
வந்து எமதூதர்கள் வளைத்து பிடித்தென்னை வாவென்று இழுத்திடும்போது மனம் எண்ணிடுமோ தெரியாது
அந்த அந்தியம் நீ வர இன்றழைத்தேன் ஸச்சிதானந்தனே ஹரி நாராயணா

அருள் செய்திடுவாய் / என்னை ஆண்டருள்வாய் /ஜகன் நாயகனே
ஆபத் பாந்தவனே /அருள் அச்சுதனே /ஸச்சிதானந்தனே
நாராயணா /பத்ரி நாராயணா / ஸத்ய நாராயணா /ஸூர்ய நாராயணா /லக்ஷ்மி நாராயணா